பாதிக்கப்படுபவர்கள் மகாராஷ்டிர விவசாயிகள். அங்கிருக்கும் விவசாயிகளுக்கு ரெக்கவரியின் அடிப்படையில் விலை கொடுக்கும் பொழுது அவர்கள்தான் இந்தப் பிரச்னையைக் கிளப்ப வேண்டும். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் விலை நியாயமாக இருக்கலாம். ஆனால் பொதுச்சந்தைக்கு விற்பனையில் நாம் போட்டி போட முடிய வில்லை. ஸ்லாப் ரேட் பிரகாரம் ரெக்கவரி வைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

Diet of Prisoners in Central Jail at Madras.

* 162 *Q.*—THIRU A. SWAMIDHAS : THIRU N. KITTAPPA : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the diet of the prisoners has been changed in the Madras Central Jail;

(*b*) if so, the details thereof; and

(*c*) the reasons thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 'சி' பிரிவு கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, அதன் காலரி அளவினை 2,650 லிருந்து 3,300 ஆக உயர்த்துவதற்காக மாற்றப்பட்டுள்ளது. அரிசி, கோதுமை, சோளம், வெங்காயம், கடலெண்ணெய், வேர்க்கடலை, வெல்லம் ஆகியவைகளின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. காய்கறிகளின் அளவு 230 கிராமிலிருந்து 250 கிராமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் வைட்டமின்களும் தாது சத்துக்களும் அடங்கிய அகத்திக்கீரை அல்லது முருங்கைக் கீரை 100 கிராம் அளவுக்கு சேர்க்கப்படுகிறது. காலை உணவுக்கு கஞ்சிக்கு பதிலாக கோதுமை அல்லது சோளம், இட்டிலி, உப்புமா அல்லது புட்டு வழங்கப்படுகிறது.

(உ) கைதிகளுக்குத் தரப்படும் உணவில் காலரிகள், சுண்ணாம்புச் சத்து, "ஏ" வைட்டமின் ஆகியவை குறைவாக இருந்த தால் அதிக ஊட்ட சத்துள்ள உணவு அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மத்திய சிறைச்சாலையில் கைதிகள் ஏ, பி, சி என்று 3 வகுப்பினராகப் பிரிக்கப்பட்டு அவர்கள் வகுப்புக்கேற்ற அடிப்படையில் படி, உணவுக்கான தொகை ஒதுக்கப் படுகிறது. எந்தெந்த வகுப்புக் கைதிகளுக்கு எவ்வளவு தொகை அளவிற்கு ஒதுக்கப்படுகிறது என்பதையும், சமதர்ம சோஷ லிசத்தைக் காண விழையும் நமது அரசு சிறைச்சாலைகளில் எல்லாக் கைதிகளையும் ஒரே வகுப்புக் கைதிகளாக நடத்த ஆலோசிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கைதிகள் வெளியிலேயிருக்கும் பொழுது எப்படிப்பட்ட வழிமுறைகளை அனுசரித்து வந்தார்களோ அந்த அடிப்படையிலே இந்தப் பிரிவு செய்யப்படுகிறது. அதைத் தவிர வேறு ஏழை பணக்காரர் என்ற அடிப்படையில் அல்லாமல் வெளிவாழ்க்கை எப்படி அமைந்ததோ அதற்கேற்ற உணவு கொடுக்க இப்படிப்பட்ட பிரிவு அமைக்கப்படுகிறது.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, கைதிகளுக்குக் காலையிலே எந்தமாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது, நடுப்பகலிலே எந்தமாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது, சாயங்காலம் எந்த மாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது, இரவில் எப்படிப்பட்ட உணவு கொடுக்கப்படுகிறது, எந்தெந்த வகையிலே கொடுக்கப்படுகிறது என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: காலையிலே, நான் முதலில் வாசித்தபடி, ஏற்கனவே கஞ்சி கொடுத்து வந்தார்கள். அந்தக் கஞ்சியை உப்புமா, இட்டிலி என்ற முறையில் மாற்றிக் கொடுக்கலாமா என்று பரீட்சார்த்தமான முறை இப்பொழுது பின்பற்றப்படுகிறது. மதியத்திலே சோறு, களி, கோதுமைக்களி கொடுக்கிறார்கள். இரவிலே அதிலே ஓரளவிற்குப் போடப்படுகிறது.

Vigilance Cell in High Court.

* 163 *Q*.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Vigilance Cell has been set up in the High Court; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) நீதித்துறை அதிகாரிகள், பணியாளர்கள் மீது சாட்டப்பட்ட லஞ்சக் குற்றச்சாட்டுகள் குறித்து நடவடிக்கைகள் எடுப்பதற்காக, சென்னை, உயர்நீதிமன்றத்தில் ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவு ஒன்று அமைப்பதற்கு 1965, மே திங்களில் அரசு ஒப்பளித்தது. இந்த ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவு, மாவட்ட செஷன்ஸ் நீதிபதியின் தரத்தில் உள்ள தனி அதிகாரி ஒருவரின் பொறுப்பில் உள்ளது. புகார்கள் குறித்துப் புலன் ஆய்வு செய்வதில் இத் தனி அதிகாரிக்கு காவல்துறையிலிருந்து அனுப்பப்படும் முறையான காவல்துறைப பணியாளர்கள் உதவுகின்றனர். உயர்நீதிமன்ற, ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றாக நான்கு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும், காவல்துறை இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமைக் காவலர் ஒருவர், காவலர் ஒருவர் ஆகியோரைக் கொண்டுள்ளது. இந்த நான்கு பிரிவுகளுக்கும் பொதுவாக காவல் துறை டெபுடி சூப்பிரின்டெண்டெண்ட் ஒருவர் தலைமை அதிகாரியாக உள்ளார். இவர் ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவின் தலைமையிடமாகிய சென்னையில் உள்ளார். துப்புகளையும், புலன்களையும் முனைப்பாகச் சேகரிக்கும் பொருட்டு, மேலும் ஒரு காவல்துறை டெபுடி சூப்பிரின்டெண்டெண்ட் சிறப்பு உதவியாளர் ஒருவர் 4 காவல்துறை இன்ஸ்பெக்டர்கள், 4 தலைமைக் காவலர்கள், 6 காவலர்கள் ஆகியோரை நியமிக்க அரசு அண்மையில் ஒப்பளித்தது.

Thiru R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, is there any proposal to extend the Cell to all the District Head-quarters?